CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சக்ர ரஹஸ்யம்

ஸ்ரீவித்யோபாஸனை

Sri Vidyabharathi Book Centre, Singeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஆதி சங்கரரும்

அவர் ஸ்தாபித்த மடங்களும்

தொகுப்பாசிரியர்:

கே. எஸ். சங்கரதாஸ், B.A., B.L.,

தஞ்சை

அகத்தியர் பதிப்பகம்

சென்னை-600 007

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முதல் பதிப்பு : ஆகஸ்டு - 1988

இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி - 1989

விலை : ரூ. 3-00

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதிப்புரை

ஸ்ரீ ஆதி சங்கரர் அத்வைத கருத்துக்களையும், வைதீக நெறிகளையும் மக்களிடையே போதிக்க பாரததேசத்தில் மடங்களை (பீடங்கள்) ஸ்தாபித்தார். இதில் ஸ்ரீ ஆதி சங்கரர் எத்தனை மடங்களை எந்த இடங்களில் ஸ்தாபித்தார் என்பதில் சில கருத்து வேறுபாடுகள் நாட்டில் நிலவுகிறது.

ஸ்ரீ ஆதி சங்கரர் ஸ்தாபித்த மடங்களைப் பற்றியும், அவரது புனிதவாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் நடுநிலையுடன் ஆராய்ச்சி செய்து, புத்தகம் வெளியிட எழுதி தருமாறு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர் திரு. சங்கரதாஸ் அவர்களை கேட்டுக்கொண்டோம். அதன்படி அவர் ஆணித்தரமாகப் பல அற்புதமான மேற்கோள் களுடன் ஸ்ரீ ஆதி சங்கரர் நான்கு மடங்களை பூரி, துவாரகை, பத்ரி, சிருங்கேரி ஆகிய நான்கு இடங்களில்தான் ஸ்தாபித் தார் என நிரூபிக்கிறார்.

மேலோட்டமாக இந்த புத்தகத்தை படிப்பவர்களுக்கு காஞ்சி மடத்தைப் பற்றி தவறாக எழுதப்பட்டுள்ளதாக நினைக்கக்கூடும். அது தவறு! தனிப்பட்ட முறையில் எங்களுக்கும் காஞ்சி மடத்துக்கும் எந்த வித கருத்து வேறுபாடும் கிடையாது. வரலாற்று உண்மைகளை மாற்றி, சில தவறான கருத்துக்கள் மக்களிடம் பரப்பப்படுவதைத் தடுப்பது எங்கள் கடமையல்லவா?

இந்த புத்தகத்திற்காக பல புத்தகங்களின் மேற்கோள் கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்காக மேற்படி நூலாசிரியர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாய்மையே வெல்லும்!

இங்ஙனம்,

சென்னை
15-8-88

அகத்தியர் பதிப்பகத்தார்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்தாபித்த மடங்கள்

ஸ்ரீ ஆதி சங்கரர் பாரத தேசத்தின் நான்கு திசைகளின் நான்கு பீடங்களை (மடம்) ஸ்தாபித்தார் என்பதும், காஷ்மீரத்தில் ஸர்வக்ஞபீடாரோஹணம் செய்தார் என்பதும் தம் வாழ்நாளின் இறுதியில் இமாலயத்திற்குச் சென்று கேதாரில் இறைவனின் திருவடி நிழலடைந்தார் என்பதும் தொன்று தொட்டு வரும் வரலாறு என்பதை யாரும் மறுக்க முடியாது. இது ஆதிசங்கரரின் திவ்ய சரித்திரம்.

இந்த வரலாற்று உண்மையை கும்பகோண மடத்தார் (காஞ்சி மடம்) ஏற்காமல் ஸ்ரீ ஆதிசங்கரர் ஐந்து பீடங்களை ஸ்தாபித்தார் என்றும் காஞ்சியில் மறைந்தார் என்றும் சொல்லியும் இதை வலியுறுத்திக் காஞ்சிமடம் சார்பில் புத்தகங்களை வெளியிட்டும் வருகிறார்கள்.

வேதம்-மஹாவாக்கியம்

ஸ்ரீ ஆதிசங்கரர் பாரத தேசத்தின் நான்கு திசைகளிலும் நான்கு பீடங்களை அமைத்து அவற்றிற்கு நான்கு வேதங்களையும் மஹா வாக்கியங்களுடன் குறிப்பிட்டு உள்ளார். அவை முறையே;

1. கிழக்கே-ஜகன்னாத மடம் - ரிக்வேதம் - மஹாவாக்கியம் 'பிரஞ்ஞானம் பிரஹ்ம்'
2. மேற்கே - துவாரகா மடம் - ஸாமவேதம்-மஹாவாக்கியம் 'தத் த்வம் அஸி'
3. வடக்கே-பத்ரிமடம் - அதர்வணவேதம் - மஹாவாக்கியம் 'அயம் ஆத்மா பிரஹ்ம'

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

4. தெற்கே-சிருங்கேரி மடம்-யஜுர்வேதம் - மஹாவாக்கியம் 'அஹம் பிரஹ்மாஸ்மி'

மேற்படி நான்கு மஹா வாக்கியங்களும் முறையே நான்கு வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆத்மபோதேந்திரர் காஞ்சி மடத்திற்கு வேதம் ரிக் வேதமென்றும், மஹாவாக்கியம் 'ஓம் தத்ஸத்' என்றும் சொல்லுகிறார். இதையே தற்போது காஞ்சி மடத்தார் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். 'ஓம் தத் ஸத்' என்கிற வார்த்தையானது ரிக் வேதத்தில் இல்லை! இவ் வார்த்தையானது மஹாபாரதத்தில்தான் உள்ளது. இதிகாச மானமகாபாரதம் ஒருநாளும் வேதமாகாது! இப்படி இருக்கை யில் நான்கு மடங்களுக்கு நான்கு வேதங்களும் நான்கு மஹா வாக்கியங்களும் முறையாக இருக்கும் போது ஐந்தாவது மடத்திற்கோ ஐந்தாவது வேதத்திற்கோ ஐந்தாவது மஹா வாக்கியத்திற்கோ இடமில்லை என்பது நிரூபணமாகிறது.

ஸ்ரீ ஆதி சங்கரர் நான்கு பீடங்களைத்தான் ஸ்தாபித்தார் என்பதை முன்பே கண்டோம். 'வியாஸாசலீயத்தில்' காஞ்சி மடத்தை ஸ்ரீ ஆதி சங்கரர் ஏற்படுத்தியதாகச் சொல்லப்படவே இல்லை. ஸ்ரீ ஆதி சங்கரரின் அஷ்டோத்தர சத நாமாவளியும் முன்பு கண்ட நான்கு பீடங்களைத்தான் ஸ்ரீ ஆதி சங்கரர் ஸ்தாபித்தார் என குறிப்பிடுகிறது. அதேபோல் ஆனந்தகிரி சங்கர விஜயத்திலும் காஞ்சியில் ஒரு அத்வைத மடத்தை ஸ்ரீ ஆதி சங்கரர் ஸ்தாபித்ததாகக் கிடையாது.

ஸ்ரீ ஆதி சங்கரர் நான்கு பீடங்களை நான்கு திசைகளைக் கருத்தில் கொண்டு அமைத்தார். தென்னிந்தியா (தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகம்) முழுவதற்கும் கர்நாடக மாநிலத் திலுள்ள சிருங்கேரியில் ஒரு மடத்தை நிறுவி இருக்கும்போது தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் மற்றொரு மடத்தை ஸ்தாபித்தார் என்பதற்கு ஸ்ரீ ஆதி சங்

CC-O. Vidyabharati Book Centre, Shingeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கர் நாட்டின் திசைகளைப் பற்றி ஒன்றும் தெரியாதவரா? காஞ்சி மடத்தாரின் பிரச்சாரத்தால் ஸ்ரீ ஆதி சங்கரருக்கு கெட்ட பெயர் அல்லவா? இதை இவர்கள் (காஞ்சி மடம்) உணர வேண்டும்.

காலடியில் சிவகுரு, ஆர்யாம்பாள் தம்பதிகளுக்கு பரமசிவனின் மறு அவதாரமாகப் பிறந்த ஸ்ரீ ஆதிசங்கரர் சிருங்கேரி, பூரி, துவாரகை, பத்ரி ஆகிய நான்கு இடங்களில்தான் மடங்களை ஸ்தாபித்தார். ஆனால் சங்கரர் எவரும் பெயரைக் கொண்ட ஏதாவது ஒரு சந்நியாசியால்தான் காஞ்சி மடம் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும். இதுதான் நடந்த உண்மை அந்த சங்கரருக்கும், ஸ்ரீ ஆதிசங்கரருக்கும் முடிச்சுப் போட பார்க்கிறார்கள்.

கி.பி. 1017 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த ஸ்ரீ ராமானுஜர் முதலில் காஞ்சிபுரத்தில் அத்வைதத்தில் புலமை மிகுந்த யாதவப் பிரகாசர் என்பவரிடம்தான் சீடராக இருந்தார். ஒரு வாதத்திற்காக காஞ்சி மடத்தார் சொல்லும்படி பார்த்தால் காஞ்சியில் உள்ள இம்மடத்தின் அத்வைத மடாதிபதியிடம் அல்லவா முதலில் சீடராகி இருக்க வேண்டும். இதே போன்று கி.பி. 1198 ஆம் ஆண்டு பெல்லியில் பிறந்த ஸ்ரீ மத்வாச்சாரியார் தமது பதினாறாம் வயதில் துறவறம் மேற்கொண்டு தமிழ்நாட்டில் பல புண்ணிய ஸ்தலங்களுக்கு திக்விஜயம் செய்தார். அதில் தமிழ்நாட்டுக்கு வந்த ஸ்ரீ மத்வாச்சாரியார் புனித ஸ்தலங்களான கும்பகோணம், காஞ்சி முதலிய பல ஊர்களுக்குச் சென்றவர் இந்த மடத்தின் (காஞ்சி மடம்) முந்தைய மடாதிபதியைச் சந்தித்து இருப்பாரே! அப்படி என்றால் ஸ்ரீ மத்வாச்சாரியார் காலத்தில் இந்த மடம் இல்லை எனத் தெரிகிறது.

பிற்காலப் பாண்டிய மன்னர்களுள் பிறந்து விளங்கிய ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1251 68) காஞ்சி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புரத்தைத் தனது இரண்டாவது தலைநகரமாகக் கொண்டான். இம்மன்னன் பக்தி நெறியில் மிகுந்த ஈடுபாடு கொண்டதன் காரணமாக சிதம்பரம், ஸ்ரீ ரங்கம் முதலிய ஆலயங்களுக்குப் பெரும் பொருளுதவி செய்தான். எப்படி விஜயநகர மன்னர்கள், மைசூர் மன்னர்கள் தங்கள் செல்வத்தையும், தங்கம், வெள்ளி போன்ற விலைமிக்க பொருட்களையும் குரு காணிக்கையாக சிருங்கேரி மடாதிபதிகளுக்கு செலுத்தினார்களோ அப்படி ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் தனது ஆட்சி எல்லையில் இருந்து காஞ்சி மடாதிபதிகளுக்கு குருகாணிக்கை செலுத்தி இருக்கலாம் அல்லவா?

ஸ்ரீ ஆதி சங்கரரின் காலத்தில் காஞ்சி மடம் ஏற்பட்டு இருக்குமாயின் முற்காலத்தில் தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இம்மடத்தின் முந்தைய மடாதி பதிகளை சந்தித்து இருப்பார்கள். அல்லது குருகாணிக்கையா வது செலுத்தி இருப்பார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அப்படி ஒரு வேளை நடந்து இருக்குமாயின் கல்வெட்டு செய்தி கள் அதிகாரபூர்வமாக தெரிவித்து இருக்கும் "காஞ்சி காமகோடி பீடம்" (காஞ்சி மடம்) அல்லது கும்பகோணம் மடம் பற்றிய பழைய கால கல்வெட்டுகள் எதுவும் இல்லை. ஆக தற் போது சில ஆண்டுகளுக்கு முன்புதான் இம்மடம் உருவாகி இருக்கலாம் என்பது நம் கருத்து!

ஸ்ரீ ஆதி சங்கரர் தான் ஸ்தாபித்த மடங்களுக்கு தமது நான்கு சிஷ்யர்களை முறையே ஸ்ரீ சுரேஸ்வராச்சாரியாரை சிருங்கேரி மடத்திற்கும், ஸ்ரீ பத்ம பாதாசாரியாரை துவாரகா மடத்திற்கும், ஸ்ரீ தோடகாசாரியாரை பத்ரி மடத்திற்கும், ஸ்ரீ ஹஸ்தாமலகாசாரியாரை பூரி மடத்துக்கும் நியமித்தார். இதில் புதியதாக ஐந்தாவது சிஷ்யரைப் பற்றி சொல்ல முடி யாத காரணத்தால், காஞ்சி மடத்தார் ஸ்ரீ ஆதிசங்கரரே காஞ்சி மடத்தை ஸ்தாபித்து, அவரே நிர்வாகம் செய்தார் என்று சொல்லுகிறார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜகத்குரு சங்கராச்சாரியார்

"ஜகத்குரு- சங்கராச்சாரியார்" என்கிற மரியாதை பட்டத்தை ஸ்ரீ ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு மடத்தின் மடாதிபதிகள் மட்டுமே தங்களுடைய ஆசிரம பெயருடன் சேர்த்துக் கொள்ளமுடியும். மேற்படி இவர்கள் தான் ஸ்ரீ ஆதி சங்கரரின் வழியில் வருபவர்கள். ஜகத்குரு- சங்கராச்சாரியார் என்கிற பட்ட பெயரை காஞ்சி மடத்தின் மடாதிபதிகள் பயன்படுத்த உரிமை கிடையாது.

சமயம் நன்னெறி பற்றிய அகராதி (Encyclopedia of Religion and Ethics): ... இந்தியா முழுவதிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவருடைய சீடர்கள் பத்துவைச் சந்நியாச தர்மங்களை வகுத்தார். அவர் (ஸ்ரீசங்கரர்) இந்தியாவில் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். தெற்கே உள்ள சிருங்கேரி மலையின் மேல் சிருங்கேரி மடம், மேற்கே உள்ள துவாரகையில் சாரதா மடம், வடக்கே பத்ரிகாச்ரமத்தில் ஜோதிர் மடம், கிழக்கே உள்ள புரியில் கோவர்த்தன மடம் ஒவ்வொன்றின் தலைவரும் ஒரு சந்நியாசி ஆவர். "சங்கராச்சாரியார்" என்பது இவர்கள் தாங்கும் பட்டப் பெயர். இந்தப் பட்டப் பெயரோடு அவருக்கே உரிய நாமமும் சேர்ந்திருக்கும்.

PTI reports (The Hindu dated 26-8-87 ..... the Sankaracharya of Dwaraka Peetham Sri Swaroopanand Saraswathi .....now camping in Poona, when asked about the

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

disappearence, however, made it clear that Sri Jayandra Saraswathi" could not be regarded as a "Sankaracarya" since he did not belong to the main four Peethams constituted by Shri Adi Sankaracharya ....Sri Swaroopananda explained that Sri Jayandra Saraswathi could not be called "Sankaracharya" because the Kanchi Kamakodi Peetham was a "Shakha" (Branch) of the Sringeri Peetham, one of the four main seats instituted by Sri Adi Shankara."

UNI reports (Deccan Herald 15-9-1987) that "He (The Sankaracharya of Puri Govardhan Math) asserted that there are only four Shankaracharyas, one each for every direction. 'So' according to us, the Kanchipuram Shankaracharya does not exist"... "They (Kanchi Mathadhipathi) do not have any legitimacy as Adiguru Sri Sankaracharya never established any math at Kanchi. So, we four Sankaracharyas (of Puri, Badrinath, Dwaraka and Sringeri) do not recognise him, Therefore, whatever he says should not be taken seriously." (Probe-India Nov. 87)

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸர்வக்ஞ பீடம்

ஸ்ரீ ஆதி சங்கரர் நான்கு திசைகளில் நான்கு மடங்களை ஸ்தாபித்து விட்டு காஷ்மீரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்தார். இது யாராலும் மறுக்க முடியாத வரலாற்று உண்மை. ஆனால், காஞ்சி மடத்தார் மட்டும் ஸ்ரீ ஆதி சங்கரர் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் ஏறினார் என சொல்லுகிறார்கள். மாதவரும், ஸதானந்தரும் ஸ்ரீ ஆதி சங்கரர் ஸர்வக்ஞ பீடத்தை காஷ்மீரத்தில்தான் ஏறினார் என்று சொல்லுகிறார்கள். மேலும் ஸ்ரீ ஆதி சங்கரரின் திவ்ய சரித்திரத்திலும் இதையேதான் சொல்லப்படுகிறது. ஆனால் காஞ்சி மடத்தார் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் ஏறினார் என்று சொன்னால் எவ்வகையில் நியாயம்? ''கலைமகள்'' [ஜூன் - 88] பத்திரிகையில் காஞ்சி மடத்துக்கு ஆதரவாக ''காஞ்சியும் காஷ்மீரமும்'' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. இதில் காஞ்சிபுரத்துக்கு ''காஷ்மீரம்'' என்கிற மாற்றுப் பெயர் பண்டைக் காலத்திலிருந்திருக்க வேண்டும் என்றும் மேலும் ''காஞ்சியின் மறுபெயர் காஷ்மீரம்'' என்றும் சொல்லப்பட்டுள்ளது குஷாண வம்சத்தை ஆண்ட கனிஷ்கர் (78-120 கி. பி.) இந்தியாவின் வடமேற்கு எல்லையில் உள்ள காஷ்மீரத்தை வென்று, அவ்விடத்தில் வெற்றிக்கு நினைவாக 'கனிஷ்கபுரத்தை' நிறுவினார். காஷ்மீரம் (காஷ்மீர்) கனிஷ்க பேரரசில் இருந்தது. மேலும் காஷ்மீரில்தான் கனிஷ்கர் நான்காவது பௌத்த சமய மாநாட்டை கி. பி. 102ஆம் ஆண்டு கூட்டினார்.

இந்தியாவின் தென்பகுதியில் கி.பி. 250-ம் ஆண்டு பல்லவ வம்சம் தோன்றியது. பல்லவ மன்னர்களின் தலைநகரம் காஞ்சிபுரம். முதலாம் நரசிம்ம வர்மன் (கி.பி. 630—668) காலத்தில் சீனப்பயணியான யுவான்சிவாங் கி.பி. 640இல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காஞ்சிபுரத்துக்கு வந்தார். அவரது நூலில் காஞ்சிபுரத்தைப் பற்றி எழுதியுள்ளார். அதில் ஒரு இடத்தில் கூட காஞ்சிபுரத்துக்கு காஷ்மீரம் என்கிற வேறுப் பெயர் இருந்ததாக சொல்லவேயில்லை. இப்படி பண்டை காலத்தில் காஷ்மீரத்தை கனிஷ்கர் ஆண்டு இருக்கிறார். அதேபோல் காஞ்சிபுரத்தை பல்லவர்கள் ஆண்டு இருக்கிறார்கள். இவர்களைத் தவிர பிற் காலத்தில் பல அரசர்கள் இரண்டு இடங்களையும் ஆண்டு இருக்கிறார்கள். எந்த ஆட்சியிலும் காஞ்சிபுரத்துக்கு காஷ்மீரம் என்கிற மறுபெயரோ, காஷ்மீரத்து காஞ்சிபுரம் என்கிற மறுபெயரோ இருந்ததாக கல்வெட்டுச் செய்தியோ, பண்டைய வரலாற்று நூல்களோ தெரிவிக்கவில்லை. இதுபோன்று வரலாற்று ஆதாரங்கள் இருக்கும்போது ''காஞ்சியின் மறுபெயர் காஷ்மீரம்'' என சொல்வது சரியான செய்தியா?

ஸ்ரீஆதிசங்கரர் காஷ்மீரத்தில்தான் ஸர்வக்ஞ் பீடம் ஏறினார் என்பதற்கு சில ஆதாரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

H.H. Wilson wrote in the year 1828 and in 1832 the Asiatic Researches and his writings had been published in 1846 at Calcutta. He says about Sri Sankara ... ''Towards the close of his life he repaired to as far as Kashmir and seated himself after triumphing over various opponents on the throne of Saraswathi .... The events of his last days are confirmed by local tradition and the

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

pitha or throne of Saraswati on which Sankara sat is stilel shown in Kashmir"

எட்வின், டி. அட்கின்ஸன் (Edwin T. Atkinson) .. தம் சீடர்களுக்காக மடங்களை ஸ்தாபித்தார். மைசூரில் துங்கபத்ராக் கரையில் உள்ள சிருங்கேரி மடம். வடக்கே பத்ரிநாத்துக்குப் பக்கத்தில் ஜோதிர் மடம் [ஜோஷி மடம்]; மேற்கே துவாரகையில் சாரதா மடம்; கிழக்கே ஓரிஸ்ஸாவில் புரியில் வர்த்தன மடம். தம் வாழ்க்கை முடிவில் சங்கரர் காஷ்மீருக்குச் சென்றார். அங்கே பிற சமயவாதிகளை வாதத்தில் வென்று வாக்தேவியான சரஸ்வதியின் சிம்மாதனத்தில் - சர்வக்ஞ பீடத்தில் ஏறியருளினார். அடுத்தபடியாகப் பத்ரிக்குச் சென்று இடிந்து கிடந்த நாராயணன் கோயிலைச் சீர்படுத்தினார். முடிவாகக் கேதார் சென்ற அவர் சிறு வயதான 32-ஆம் வயதிலேயே தேக வியோகமானார்.—"இந்தியாவின் வட மேற்கு எல்லை மாகாணங்களின் ஹிமாலய ஜில்லாக்கள் II-XI வட மேற்கு எல்லைமாகாண கேஸட்டீர்- பக் 768-9; 1884]

சுவாமி தபோவன்ஜி :

சங்கரர் இங்கே [கேதார்நாத்]தான் தம் உடலை நீக்கினார். இவர் தமது விஜய யாத்திரையின் போது [காஷ்மீரில் உள்ள] சாரதா கோயிலைத் தரிசித்தார். இங்கே இவர் பல பிரபலமான சமயவாதிகளோடு வாதம் செய்து வென்று சர்வக்ஞ பீடத்தில் ஏறினார். (Himagir. Vihar - Wanderings in the Himalayas பக் 42-ம் 70-71ம்)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மறைந்த ஸ்தலம்

ஸ்ரீ ஆதிசங்கரர் காஷ்மீரத்தில் ஸர்வக்ஞபீடத்தை அதிஷ்டித்து கடைசியில் ஹிமாலயத்திலுள்ள கேதாரத்திலிருந்து கைலாலத்திற்குச் சென்றார் என மாதவரும், ஸதானந்தரும் இயற்றிய நூல்களிலும் மற்றும் ஸ்ரீ ஆதி சங்கரரின் வரலாற்று நூல்களும் தெரிவிக்கின்றன.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் (முன்னாள் ஜனாதிபதி):- அவர் [சங்கரர்] நான்கு மடங்களை ஸ்தாபித்தார். இவற்றுள் முதன்மை பெற்றது மைசூரைச் சேர்ந்த சிருங்கேரியில் உள்ள மடம், கிழக்கே புரியிலும், மேற்கே துவாரகையிலும் ஹிமாலயத்தில் பத்ரியிலும் உள்ளவை. மற்றவை பரம்பரை நம்பிக்கைப் படி. இவர் கேதாரநாத்தில் தமது 32-வது வயதில் தேக வியோகம் ஆனார். (Indian Philosophy II-London; George Allen and Union) "பிரம்ம சூத்திரம்" பக். 28. 1962 ஜனவரி 23-ஆம் தேதி வேங்கடேச்வர சர்வகலா சாலை பேச்சு முதலியவை.

ஜே எஸ்ட்லின் கார்ப்பென்டர் (J. Estlin Carpenter):-

சீடர்கள் தம்மைச் சூழத் தொடங்கியவுடன் அவர் [சங்கரர்] நான்கு மடங்களை ஸ்தாபித்தார். இவற்றுள் ஒன்று மைசூரில் உள்ள சிருங்கேரி மடம். இது இன்றும் பிரபலமாக இருக்கிறது. இதன் தலைவருக்கு நல்லசெல்வாக்கு இருக்கிறது. சங்கர் காஷ்மீரம்வரை பிரயாணம் செய்ததாகவும் ஹிமாலயத்தில் உள்ள கேதார நாத்தில் கி. பி. 820-தமது 32-ம் வயதில் காலமடைந்ததாகவும் அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள், (Theism in Medieval India p. 309)

சுவாமி ஆத்மானந்தர் :

.. கடைசியாகப் பத்ரிநாத், புரி, சிருங்கேரி, துவாரகை ஆகிய நான்கு இடங்களிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்து இவர் தம் பணிகளை முடித்துக் கொண்டார் ..... சங்கரர்

CC-O. Vivekananda Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்தியாவில் வடகோடி வரை யாத்திரை செய்து கேதார் நாத்தில் தேகவியோகம் அடைந்தார் (Sankara's Teachings in His own Words பக்-34 35 Bhavan's Book University.)

எவ்வரி மான்ஸக்ளோபீடியோ (Everyman's Encyclopedia:)

அவரது வாழ்க்கை முடிவில் அவர் ஹிமாலயத்திலுள்ள கேதாரநாத்துக்குச் சென்று தமது 32-வதுவயதில் அங்கேயே காலமானார் (Iip 84)

Atkinson Gazetteer - Vol II (edited in 1882 83) Says ..... "finally Proceeded to kedar where he (Sankara) died at the early age of thirty two."

Prof. Wilson in Glossary of 1885 Says "Whether he (Sankara) was more than a Passing pilgrim at Conjeevaram (காஞ்சிபுரம்) is doubtful."

Prof. H. H. Wilson (1846) Says - He (Sankara) next went to Badarikasrama and finally to kedarnath in the Himalayas where he died at the age of thirty-two

இப்படியாக பலர் கேதாரத்தில்தான் ஸ்ரீ ஆதிசங்கரர் மறைந்தார் என்று சொல்லும் போது காஞ்சி மடத்தார் அதை ஏற்காமல் வரலாற்று உண்மைக்கு புறம்பாக, ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சியில் மறைந்தார் என சொல்கிறார்கள்.

இதுபோன்று ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சியில்தான் ஸர்வக்ஞ பீடம் ஏறினார், காஞ்சியில்தான் மறைந்தார் என்று சொல்வ தால் ஸ்ரீ ஆதி சங்கரருக்கும் காஞ்சி மடத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என மக்கள் நம்புவார்கள் என்கிற எண் ணம் போலும்! தொன்று தொட்டு வரும் வரலாற்று உண்மை களையும், ஆதாரங்களையும் ஒரு மடத்தார் தங்களுக்குச் சாதகமாக மாற்றுவது என்பது அநீதி. இந்த மாதிரி தவற்றை மேன் மேலும் யாரும் எந்த நிலையிலும் செய்யாமல் இருந்தால் அது அனைவருக்கும் நன்மை தரும்!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

KNOW THE FACTS

M.G. Raja Ram
Joint Secretary

D.O. No. 19—64 (63—S.II
Government of India
MINISTRY OF EDUCATION
New Delhi, the 29th May
1st June 1963

Dear Shri Lakshmanan,

I am very glad to receive your letter dated 27th May, 1964 enclosing the resolutions of the Conference of Disciples and Devotees of Sri Sringeri Mutt at Salem on 14-12-63 and 15-12-63.

Regarding the matter about Sri Adi Sankara attaining Samadhi at Kedarnath I would like to state that it is neither my view nor that of the Government. It was only a question posed to Shri Subba Aiyar, for his views. In this connection I enclose a copy of my letter written to Shri Subba Aiyar which will clarify the position to your satisfaction. I may tell you that myself was fully aware

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

that Kedarnath was the place where Sri Adi Sankara attained Samadhi and that the 4 Maths were founded by Sir Adi Sankara at Puri, Sringeri, Dwaraka and Badrinath. I am also personally aware of the fact that these 4 Maths are Amnaya Peetams for the 4 Vedas - Poorva Amnaya at Puri for Rig Vada. Pashchima Amnaya at Dwaraka for Sama Veda, Dakshina Amnaya at Sringeri for Yajur Veda and Uttara Amnaya at Badrinath for Atharva Veda. My only object in writing to Shri Subba Aiyar was to get my own views confirmed. Now that I have his views and also the very knowledgable and authoritative views of your Conference, I have the satisfaction that these things will be depicted correctly in the School Atlas.

May I also thank you for taking the trouble of writing to me Kindly convey my personal regards to Shri T. S. Pattabiraman, M P. and also to the Standing Committee Members of the Conference.

With my own regards to you.

Yours sincerely,

(Sd) M. G. RAJARAM.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Dear Subbha Aiyar,

Please refer to Your letters dated 25th March, 1964 and 13th May 1964 concerning Map on Archaeology and Tourism (page 27 of the survey of India School Atlas) I am very sorry I could not reply earlier as I have frequently out on tour.

With reference to the matter mentioned in para, 5 of my D. C. No. 19-64/63-S II dated 3 rd March, 1964 I would like to state that it was merely posing that question to you inviting your views. It is neither my view nor that of the Government. Obviously we cannot go against factual history. In view of vigorous elucidation so nicely brought out by you in your letter there can be no doubt that Sri Adi Sankara attained samadhi ONLY at Kedarnath and NOT at Kanjeepuram.

In this connection I have today received a letter from Shri S. V. Lakshmanan, B. A. B. L the Secretary of the conference of Disciples and Devotees of Sri Sringeri Mutt at Salem (14 12-63 and 15-12-63). In that letter he mentions about the correspondence between us and quite justifiably he has also vigorously eludidated the fact that Sri Adi Sankara attained Samadhi at Kedarnath. He has also quoted profusely from various authors of eminence in support of that. He was also stated that it is the considered opinion of eminent scholars like our President, Dr. Radhakrishnan and the

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

late Pt. Jawaharlal Nehru that Sri Adi Sankara established only 4 Maths and according to them Kamakoti Peetam was NOT established by Adi Sankara.

In view of all this, I now propose taking action for incorporation of correction in the School Atlas on page 27 as under.

(1)	KALADI	Pilgrim centre	(Birth place of Adi Sankara)
(2)	BADRINATH	-do-	(Sankaracharya Math)
(3)	PURI	-do-	(Sankaracharya Math)
(4)	SRINGERI	-do-	(Sankaracharya Math)
(5)	DWARAKA	-do-	(Sankaracharya Math)
(6)	KEDARNATH	-do-	(Sankaracharya Kaivalya Dham)
(7)	KUMBAKONAM	-do-	(Maha Makam Festival)

As regard the suggestion in para 2 of your letter dated 19th May about the fact that the 4 Maths were founded for the 4 Vedas, I would suggest we merely keep those places indicating the existence of Sankaracharya Maths as otherwise the man face will be cultured too much.

As regard Kanjeevaram, I suggest we leave it as at present showing brackets only "Devaraja and Ekambarnath Temples"

Thanking you once again for your valuable suggestions.

Yours sincerely,

(Sd.) M. G. RAJARAM

Sri Vidyabharathi Sch. Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Vice-President
INDIA
NEW DELHI

June 11, 1960

Dear Shri Rajagopal Sarma,

Thank you for your letter of June 6. This is what I wrote in a book published in 1823.

"He established four mutts or monasteries, of which the chief is the one at Sringeri in the Mysore Province, the others are those at Puri in the East, Dwaraka in the West, and Badrinath the Himalayas."

This is the opinion of which I hold.

I have no comments to make on the recent controversy.

To my knowledge there are only 4 mahavakyas connected with four mutts.

With best wishes,

Yours Sincerely,
(Sd.) S. RADHAKRISHNAN

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Prime Minister's House
NEW DELHI.

No. 1731-PMH/60
August 13, 1960

Dear Shri Sari Sarma,

I have your letter of August 9th. What I wrote in my book "Discovery of India" about Shri Sankaracharya is still my opinion. You publish the extract from my book to which you have drawn my attention.

Yours sincerely,
(Sd.) JAWAHARLAL NEHRU

"Discovery of India" "And yet Shankara was a man of amazing energy and vast activity. He was no eacapist retirint into his shell or into his shell or into a corner of the forest seeking his own individual perfection and oblivious of what happened to others. Born in Malabar in the far South of India, he travelled incessantly all over India, meeting innumerable people arguing, reasoning, convincing and filling them with a part of his own passion and tremendous vitality He was evidently a man who was intensely conscious of his mission, a man who looked upon the Himalayas as his field of action and as something that held together culturally and was infused by the same spirit. though this might take many external forms. He strove hard to

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

synthesize to diverse currents that were troubling the mind of India of his day, and to build a Unity outlook out of that diversity. In a brief life of thirty-two years he did the work of many long lives and left such an impress of his powerful mind and rich personality on India that it is very evident today. He was a curious mixture of a philosopher and a Scholar, an agnostic and a mystic, a poet and a saint and in addition to all this, a practical refomer and an able organizer He built up, the first time within the Brahminical fold, ten religious orders and of these four are very alive today. He established four great mutts or monasteries, locating them far from each other almost at the four corners of India. One of these was in the South at SRINGERI in Mysore, another at PURI on the east coast, the third at DWARAKA in Kathiawad on the west coast, and the fourth at BADRINATH in the heart of the Himalayas. At the age of thirty two this Brahmin from the tropical South died at Kedernath in the upper snow-covered reaches of the Himalayas. (Page 182, para 2, Fourth Edition)

' By locating his four great monasteries in the north, south, east and west, he evidently wanted to encourage the conceptin of a culturally united India. These four places had been previously place of pilgrimage from all parts of the country, and now became more so." (Page 183, Para 2)

(Sd.) JAWAHARLAL NEHRU

Sri Vidyabharathi Book Centre, Amgaon

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தலைமை நீதிபதியான புவனேச்வர் பிரஸாத் ஸின்ஹா (இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்):-

பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆதிசங்கரர் ஸ்தாபித்த நான்கு பீடங்கள். ''பவன்ஸ் ஜர்னலின்'' விசேஷ மலர்: 1950 மார்ச் 20'

விஜனகுமார முகர்ஜி

(Bijankumar Mukherjee, formerly Chief Justice of India): தாம் போதித்த அத்வைத தத்வத்தை பலப்படுத்தி ஸ்தாபிப்பதற்குச் சங்கரர் இந்தியாவின் நான்கு திக்குகளில் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவை வடக்கில் பத்ரிநாதத்தில் ஜோதிர் மடம், கூர்ஜரத்தில் சாரதா மடம், தென் இந்தியாவில் சிருங்கேரி மடம், கிழக்கே புரியில் கோவர்த்தன மடம். இவைகளில் தம் சந்நயாசி சீடர்களை தலைமை தாங்க வைத்தார். சங்கரருக்குப் பிறகு, அவர் பெயரையே வைத்துக் கொண்டு பல சீடர்கள் பல இடங்களில் புது மடங்களை நிறுவினார்கள். சிருங்கேரியிலுள்ள ஆதி மடத்திலிருந்து ஆறு கிளை மடங்கள் கிளம்பின.

ஸ்வாமி நிகிலானந்தர் : [விவேகானந்த மடம்; (Red Top; Lake George, New York): கேதார்நாத்தில் தமது 32-ஆம்வயதில்தேகவியோகம் ஆவதற்குமுன் சங்கரர் தெற்கு மைசூரைச் சேர்ந்த சிருங்கேரியில் ஒன்றும், கிழக்கே புரியில் ஒன்றும், மேற்கே துவாரகையில் ஒன்றும், வடக்கே ஜோஷிமாலயத்தில் ஒன்றான ஜோஷி மடமுமாக நான்கு மடங்களை ஸ்தாபித்து ஒவ்வொன்றுக்கும் தலைமை தாங்க தமது சீடர்களில் சிறந்த ஒருவரை நியமித்தார். அவர் பழமையான வேதம் சொல்லும் சந்நியாசக் குழு ஒன்றை முறைப்படுத்தி இந்தக் குழுவே ஹிந்துக்களின் ஆத்மீக விஷயங்களில் தலைமை தாங்கும் உரிமை உள்ளது என்று பகுத்து வைத்தார்.

'ஆத்ம போதம்' என்ற நூலை முகவுரை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்வாமி தாயனந்த சரஸ்வதி (ஆர்ய சாமஜ ஸ்தாபகர்)

இவர் தாம் எழுதிய ''சத்யார்த்தப் பிரகாசம்'' என்ற நூலில் சங்கரர் ஸ்தாபித்த நான்கு மடங்களைப் பற்றி குறிப் பிடுகிறார். அவை துவாரகை, பத்ரிநாத், புரி, சிருங்கேரி. வேறு மடம் ஒன்றையும் இவர் குறிப்பிடவேயில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

P. B. MUKHARJI (Calcutta High Court and President, Ramakrishna Mission Institute of Culture)

இந்தியாவின் நான்கு மூலைகளிலும், நான்கு திசைகளில் ஆன்மீக ஜீவநாடியான கேந்திரங்களை ஸ்தாபித்தார்- இவை கிழக்கே புரியில் கோவர்த்தன மடமும், தெற்கே மைசூரில் சிருங்கேரி மடமும், மேற்கே துவாரகையில் சாரதா மடமும், வடக்கே ஜோதிர் மடமும். உபநிஷத்தின் கம்பீரமான மஹா வாக்கியங்களே இந்த மடங்களின் உயர் லக்ஷ்யமாகும். முக்கியமான ஆன்மீக சம்பிரதாயங்களை காக்கவும் நிர்வகிக்க வும், உயர்த்தவும் நிறுவப்பட்ட ஒய்வற்ற காவலர்கள் போன் றவை இந்த நான்கு மடங்களும்.

(Shankara- The Panorama of his Life, Message and PhilosoPhy)

ஆர். ஆர். திவாகர் (R. R. Diwakar):

ஷிமோகா ஜில்லாவில் உள்ள சிருங்கேரியில்தான் ஸ்ரீ சங்கராச்சாரியார் [8-ம் நூற்றாண்டு] தம் முதல் தர்மபீடம் அல்லது ஆச்சார்ய பீடத்தை ஸ்தாபித்தார். மேற்கில் துவா ரகை, கிழக்கில் புரி, வடக்கில் பத்ரிநாத் இவை இவர் ஸ்தா பித்த வேறு மடங்கள். சிருங்கேரிபீடம் பரம்பரை இடையறாத ஒன்று; சுரேச்வராச்சாரியார், வித்யாரண்யர் போன்ற மகனி யர்கள் இங்கே ஆசார்யபீடம் வகித்திருக்கிறார்கள். (Some Saints and Savants fo Karnatak; Indian National Congress Souvenir, 1960)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸர் சார்லஸ் எலியட்: ஹிப்பர்ட் பிரசங்கங்கள்

(Sir Charles Eliot: Hibbert Lectures) இரண்டாம் தொடர் அக்டோ-டிசம் 1919): ..... தம் பிரயாண காலத்தில் பால் (Paul) என்ற ஞானியரைப் போல இவரும் ஆக்க வேலைகளில் முனைந்தார். இவர் சிருங்கேரி, புரி, துவாரகை, ஹிமாலயத்திலுள்ள பத்ரிநாத் ஆகிய இடங்களில் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். பத்ரிநாத்துக்குச் சமிபத்தில் இவர் காலமானார். [பக் 209]

மகாமகோபாத்யாய டாக்டர் பி. வி. காணே:

பிரபல அத்வைத ஆசாரியரான பெருமைமிக்க ஆதி சங்கரர் காலத்துக்குப்பின் மடஸ்தாபனத்துக்கு ஒரு புதுபெருமை ஏற்பட்டது. தமது வேதாந்தக் கொள்கையைப் பரப்புவதற்காக இவர், சிருங்கேரி, புரி, துவாரகை, பத்ரி ஆகிய நான்கு மடங்களை ஸ்தாபித்ததாகப் பரம்பரைப் பேச்சு இருந்து வருகிறது. (History of Dharma Sastra vol. 112. பக். 307)

ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி :

(Founder, The Divine Life Society, Rishikesh): இப்போது பன்னிரெண்டு நூற்றாண்டுகளாக விளங்கி வரும் சிருங்கேரி பீடம் உலகிலேயே பழமை வாய்ந்த பீடங்களுள் ஒன்று. சங்கராச்சாரியார் நிறுவின நான்கு மடங்களில் இது முந்தியது. மற்றவை புரி, துவாரகா, ஜோதிர் மடங்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுவாமி ராஜேச்வரானந்தர் :

கல்விக்கும் ஆத்ம போதத்துக்கும் இருப்பிடமான பெருமை மிக்க ஸ்தாபனங்களாக இந்தியாவின் நான்கு திசைகளிலும் இவர் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். [Thus Spake Sankara பக் 9]

சுவாமி சுத்தானந்த பாரதி :

இந்தியா எங்கும் மைய ஸ்தானங்களில் சங்கரர் மடங்களை ஸ்தாபித்தார். இவற்றுள் முக்கியமானது மைசூரில் உள்ள சிருங்கேரியில் இருக்கிறது. இதற்குச் சாரதா பீடம் என்று பெயர். புரி, துவாரகை, பத்ரிநாத் இங்கே உள்ளவை மற்ற முக்கியமான மடங்கள் [The Illustrated Weekly of India, May, 27, 1962]

டாக்டர் என். வெங்கடரமணய்யா :

பிராமண மடங்களின் ஒருவகை தங்களுக்கு மூலம் ஆதி சங்கரர் அல்லது அவர்கள் சீடர்களுள் ஒருவர் என்று கூறுகின்றன. இந்த வகை மடங்களுள் மிகவும் முக்கியமானது சிருங்கேரியில் உள்ள மடம்தான். இதற்கு மைசூர் ராஜ்யத்தோடு நெருங்கிய தொடர்பு இருந்தது. இந்த மடத்தின் கிளைகள் புஷ்பகிரி, விரூபாக்ஷம், கும்பகோணம் ஆக ஸ்தாபிக்கப் பட்டன. [Studies in the History of the Third Dynasty of Vijayanagar- பக். 324]

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுவாமி ரங்கனாதானந்தர் :

இந்தியாவின் நான்கு திசைகளிலும் இவர் (சங்கரர்) நான்கு மடங்களை ஸ்தாபித்தார். இந்த மடங்களுக்குத் தலை வர்களாக நல்லறிவும் ஒழுக்கமும் ஞானமும் படைத்த சந்நியாசிகளை அமர்த்தினார். தெற்கே சிருங்கேரியிலும் கிழக்கே புரியிலும், மேற்கே துவாரகையிலும், வடக்கே பத்ரி நாத்திலும் இந்த மடங்கள் ஏற்பட்டன. (Eternal va ues for a changing society- பக். 91)

சி. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியும், எம். எஸ். ராமசுவாமி ஐயங்காரும் :

இந்திய சமயாச்சாரியார்களுள் அவர் ஞானி பீடர் (St. Peter) போன்றவர். இவர், மைசூரில் உள்ள சிருங்கேரி யில் ஒன்றும், காதியவாடியிலுள்ள துவாரகையில் ஒன்றும், ஒரிஸ்ஸாவில் உள்ள புரியில் ஒன்றும், ஹிமாலயத்திலுள்ள பத்ரிநாத்தில் ஒன்றுமாக நான்கு பெருமைமிக்க மடங்களை ஸ்தாபித்தார். (பக் 267, A History of India Part I, Hindu India P-163)

எச். சட்டர்ஜி :

வடக்கே ஹிமாலயத்திலுள்ள பத்ரிநாத், தெற்கே மைசூரி லுள்ள சிருங்கேரி கிழக்கே புரி, மேற்கில் துவாரகை ஆகிய நான்கு இடங்களில் அவர் (சங்கரர்) நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவரது சொந்த நாடான தெற்கே ஏற்பட்ட மடமே இவற்றுக்குள் முக்கியமானது. (Brief Survey of Indian History 5-ஆம் பதிப்பு, பக். 10)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

டாக்டர் ராதா குமுத முகர்ஜி :

இந்தியாவின் நான்கு மூலைகளில் சங்கராச்சாரியார் நான்கு மடங்களை நிறுவினார் ; அவை வடக்கே ஜோதிர் மடம், மேற்கே சாரதா மடம், தெற்கே சிருங்கேரி மடம், கிழக்கே கோவர்த்தன மடம். இவைகளை சங்கரரின் திக்விஜய ஸ்தம் பங்கள் எனலாம். இந்தியாவை வியாபிக்கும் அவர் ஆத்மிக ஸாம்ராஜ்யத்தின் கேந்திரங்களாகும் இவை. ("Who says that India was never united?" 'Bhavan's Journal pp. 26-7 July 9, 1961)

"கலைமகள்" (மே-88)

... ... அத்வைத சித்தாந்தத்தை, இந்து மதத்தின் ஆணிவேரை நிலை நிறுத்திய ஞானத் திருவுரு ஆதி சங்கரர் வாழையடி வாழையாகத் தம் பணி தொடர, நான்கு திக்குகளி லும், நான்கு திருமடங்களை நிறுவி தம் சிஷ்யர்களைப் பீடாதிபதியாக அமர்த்தினார்.

"இந்திய வரலாறு" (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்) பதிப்பு - 1988.

...அவர் (சங்கரர்) தம்முடைய கருத்துகளை பரப்ப புகழ் மிக்க மடங்களை நிறுவினார். அவைகள் முறையே கர்நாடக மாநிலத்தில் சிருங்கேரியிலும், குஜராத் மாநிலத்தில் துவாரகா விலும், ஒரிஸ்ஸாவில் பூரி நகரிலும், பனிபடர் இமயத்தின் உச்சியில் பத்ரிநாத் என்ற இடத்திலும் உள்ளன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஆச்சாரியாள் இவ்வாறு லோக சஞ்சாரம் செய்து துர்மத நிவாரணம் பண்ணி நான்கு மடஸ்தானம்செய்து பின்பு உபாஸனாக்ரமத்திற்காம ஷண்மதஸ்தாபனம் செய்தார்கள்.

-காஞ்சி பெரியவர்
ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

ஆதாரம் :- ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 1953-ஆம் ஆண்டு உபந்யாஸ தொகுப்பு புத்தகம் -இரண்டாம் பாகம்.

காஞ்சிப் பெரியவர் அவர்களே ஸ்ரீ ஆதி சங்கரர் நான்கு மடங்களை (பூரி, துவாரகை, சிருங்கேரி, பத்ரி) தான் ஸ்தாபித்தார் என்று சொல்லியும், காஞ்சி மடம் ஸ்ரீ ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்படவில்லை என சொல்லியும் இருக்கிறார். இதை காஞ்சி மடத்தார் உணர வேண்டும்!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Sankaracharya of Puri Govardhan Math states, dated 29-4-1962," .....His our disciples and Apostolic successors i e., Shree Padmapadacharya, Shree Sureshwaracharya, Shree Hastamalakacharya and Shree Totakacharya whom Bhagwan Shree Sankaracharya installed with His own hands as successors on the four pontifical Gaddis founded and established by HIM in the four cardinal directions in India."

H.H. Sri Swami Tapasyanandji Maharaj of Sri Ramakrishna Mathstates,—".....Traditionaly, four Maths are supposed to have been founded by Sankara at the four regions of India—at Sringeri in the south under Ruresh wara, at Dwaraka in the west under Hastamala, at Badhri in the north under, Totaka, and at Puri in the east under Padmapada."

—(Ref. Sankara-Dig-Vijaya translated into English)

Dr. Rajendra Prasad (President, Indian Union) writes on 2-1-1963 about the book 'Srimath Jagadguru Shankaramath Vimarsha'—a critical and academic study on all claims made by Kumbakonam—Kanchi Kamakoti Math and establishes the fact that Kumbakonam Kanchi Math was not established by Sri Adi Sankara and that it is a Shankara Sampradaya math established long long after Sri Adi Sankara.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Chief Justice Courtney Terrell (Patna High Court) :

The founder Adi Sankaracharya divided India into four Jurisdictions with a math at the head of each. Under the western jurisdiction was placed the territory roughly corresponding to that now known as the Bombay Presi dency-called the Sarada Math at Dwaraka Northern India was placed under the Jyothi Math which is now extinct' Eastern India was placed under the Govardhna Math and Southern India under the Sringeri Math (Appeal from original decree—No. 3 of 1931—Judgement 19 November 1936).

Kingdom of Nepal writes (dated 13-5-1940)... ..I write to inform you that Goverment of Nepal have neve acknowledged the Head of the Kanchi Kamakoti Peetham as their Guru.

Dewan and Administrator, Ramnad Samsthanam, Ramanathapuram, writes (dated 28-1-1963) Sri Sharada peetham (Sringeri) has particularly very long connection with the Ramnad Samsthanam and Acharyas of Sringeri Math are regarded by Setupathis as their Kulaguru.

H. H. The Maharaja of Travancore writes (Ref 2511/60 of 11-9-60) ... regarding the claims of Kumba-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

konam math as the direct descendents of Sri Adi Sankara and the establishment of their math by Sri Adi Sankara at Kenchi, I write to inform you that there are no authentic records here to prove the aboxe.

Rev. A. R. Slater ;

The great teacher (Sankara) in order to spread his teachings over the whole land, decided to found four maths at the four cardinal points. Sringeri was one of the place selected.

(Q. J. M. S. VI p. 251)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri